*நண்பகல் 12–00*

## (ஆ) வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜாக்டோ–ஜியோ அமைப்பினர்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கைவிடவும், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றவும் வலியுறுத்துதல்

**திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய கூட்டமைப்பான ஜாக்டோ—ஜியோ அமைப்பினர் தங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் வலியுறுத்தி, நேற்று சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற வகையில் உண்ணா நிலை அறப் போராட்டம் மேற்கொண்டிருந்ததைத் தாங்கள் அறிவீர்கள். கடந்த ஜனவரி மாதம் 22 ஆம் தேதியன்று ஜாக்டோ—ஜியோ அமைப்பினர் வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கி, அதனைத் தொடர்ந்து ஜனவரி மாதம் 29 ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வேண்டுகோளை விடுத்து, அதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதற்கு மறுநாளே, அதாவது, ஜனவரி மாதம் 30 ஆம் தேதியன்று வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு, அவர்கள் பணிக்குத் திரும்புவதாக அறிவித்து, அவர்கள் பணிக்கும் திரும்பிவிட்டார்கள். ஆனால், அந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள்மீது தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை மிகுந்த வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. தற்போதும், 1,990 பேர்மீது தற்காலிகப் பணி நீக்க ஆணை வழங்கப்பட்டு, அதில் 1,363 பேர் மீளவும் பணியமர்த்தப்பட்டதுபோக, ஏறத்தாழ 627 பேர் தற்காலிகப் பணி நீக்கத்தில் இன்றைக்கும் இருக்கிறார்கள்.* 17–B *குற்றச்சாட்டின்கீழ் 5,068 பேர் இப்போது இருக்கிறார்கள்.* (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். மாண்புமிகு உறுப்பினர் தங்கம் தென்னரசு, இதுகுறித்து ஏற்கெனவே இந்த மன்றத்தில் நிறைய பேசப்பட்டுள்ளது.* (குறுக்கீடு) *நான்தான் உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். நான் சொல்வது என்னவென்றால், இதுகுறித்து நிறைய பேசியிருக்கிறோம். மிகவும்* deep *ஆகப் பேச வேண்டாம்.* (குறுக்கீடு) *நீங்கள் மேலோட்டமாகப் பேசி, அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

*2019 ஜூலை 8]*

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, deep ஆக இல்லை. மேலோட்டமாகத்தான் சொல்கிறேன். நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். மீதமுள்ள ஏறத்தாழ 1,500 பேர் பணி மாறுதலில் இருக்கிறார்கள். இவர்கள்மீது பல நடவடிக்கைகள் மற்றும் வழக்குகள் புனையப்பட்டிருக்கின்றன. பதவி உயர்வுகள் இப்பொழுது பலருக்கு நிறுத்தப்பட்டிருக்கின்றன. பணி மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாகப் பார்த்தோமென்றால், திரு. சுப்பிரமணியம் அவர்களை ஓய்வு பெறுவதற்குமுன் கடைசி நாளில் suspend செய்திருக்கக்கூடிய நடவடிக்கைகள் இருக்கின்றன. அதனால், நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எங்களுடைய கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால்,

"கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம்
நீங்காமை வேண்டு பவர்"

என்ற வள்ளுவன் வாக்குப்படி, இந்த அரசு கடிது ஓச்சலாம். ஆனால், மெல்ல எறியக்கூடிய முறையை இந்த அரசு பின்பற்றி, அன்புகூர்ந்து அவர்கள்மீது இருக்கக்கூடிய நடவடிக்கைகளையெல்லாம் கைவிட்டு, அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, CPS உள்ளிட்ட கோரிக்கைகளைப் பற்றியெல்லாம் அவர்களுடன் பேசுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள்மீது எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிடுவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாக்டோ—ஜியோ அமைப்பினர் சில கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக பொது நல வழக்கு ஒன்று தொடரப்பட்டு, அவ்வழக்கு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் இருக்கிறது. வழக்கு நிலுவையில் இருக்கின்றபட்சத்தில், அவ்வழக்கு குறித்து விவாதிப்போம் என்று சொன்னால் அது sub judice ஆகிவிடும். அது நீதிமன்ற அவமதிப்புக்குள்ளாகும். எனவே, வழக்கு நிலுவையில் இருக்கின்ற காரணத்தால், அதுபற்றி இந்த அவையில் விவாதிக்க முடியாது.